# அனல்

புதுமலர்: 12 இதழ்: 02 பங்குனி - சித்திரை

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே **அனலாயிருங்கள்**

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

ஆசிரியர்:
வே.மகாராஜா

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.03.2015


# பொருளடக்கம்


* அனலின் குரல்
* கதையும் கற்றதும் - உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கு
* வாலிபர்வனாகம் - பராக்கிரமசாலியே
* கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்
* பெண்கள்பக்கம் - அவள்இருந்த வீட்டில்தேவதூதன்பிரவேசித்து
* நற்செய்திப்பகுதி - தேவன் உன்னுடனே
* பக்தர்களின் பயிலகம்
* குறுக்கெழுத்துப் போட்டி - 66
* பெற்றோரின் தவறான பக்தி
* அருட்பணியாளர் சரிதை - சூசன்னா, கேத்தரின் பூத்
* வினா விடை - 68
* அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.





## எழுத வேண்டிய விலாசம்


**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

**ஆசிரியர் "அனல்",**
**347 நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அன்பின் குரல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இவ் வருடத்தில் இரண்டாவது தடவையாக இச் சஞ்சிகையூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந் நாட்களில் தேவன் தம் வார்த்தையின்படி செய்து வருகின்ற அவருடைய சகல காரியங்களுக்காகவும் அவருக்கே மகிமையுண்டாகட்டும். கர்த்தருடைய வசனம் சொல்கிறது: **"அவர் நினைத்தது தடைபடாது"** என்பதாக. தன் சிருஷ்டியாகிய ஒவ்வொரு மனிதனும் வாழவேண்டிய வழி முறையை அவர் எமக்கு கொடுத்திருக்கிறார். உன் வாழ்வைக் குறித்து கலக்கத்தோடு இருக்கிறீரா? **கலக்கத்தைப் போக்கும் தேவன் உன் வாழ்வில் உன்னைக் குறித்து நினைத்திருப்பவைகள் கண்டிப்பாக நிறைவேறும்.**

ஆண்டவர் இயேசு, நாம் வாழ வேண்டும் என்றும், பரிசுத்தமாக வேண்டும் என்றும், நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்றும், உன் வேதனைகளும், துக்கங்களும் மறைய வேண்டும், நீ தேவனுடைய சித்தம் செய்ய வேண்டும் எனவும் நினைக்கிறார். நீ பாவம் செய்ய வேண்டும் என ஆண்டவர் நினைப்பதில்லை! நீ பாதாளம் செல்ல வேண்டும் எனவும் ஆண்டவர் நினைப்பதில்லை! தம்மோடு கூட நித்திய நித்தியமாய் பரம சந்தோசத்தில் நீ நிலைத்திருப்பது தேவனுடைய விருப்பம்!!

அந்த ஆண்டவர் இயேசுவின் வழியில் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பிள்ளைகளாய் எம்மை அர்ப்பணிப்போம்.

- ஆசிரியர் -




அந்த வீடு எப்போதுமே கலகலப்பாகத் தான் இருக்கும்! அங்கே சிரிப்புக்கும் குதூகலத்திற்கும் எப்போதும் பஞ்சமே இருக்காது. எல்லோரும் எப்போதும் ஏதோவொரு காரியத்தில் பரபரப்பாக பேசிக் கொண்டேயிருப் பார்கள். அந்த வீடு சிறியதொரு சந்தை என்றே சொல்லக்கூடியளவுக்கு பரபரப்பாக இருக்கும்.

ஆனால்..... அதற்குள்ளும் ஒரு மூலையில் ஒருவர் வேண்டத்தகாத பொருள் போன்று அல்லது அழுக்கடைந்த துணி மூட்டை போன்று ஈசிச் செயாரில் உறைந்து போய்க்கிடந்தார். ஆம்! அவர் வேறு யாருமல்ல.... அந்த வீட்டின் தாத்தாவாகிய 82 வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் பெனடிக்ற் தான். அவர் எப்போதும் தனிமையின் இருளுக்குள் மூழ்கிப் போய் தவித்துக் கொண்டிருந்தார்.

அந்த வீட்டிலே பெனடிக்றின் பிள்ளைகள், அவர்களின் மனைவிமார், அவர்களின் பிள்ளைகள் என சிறிய கிராமமே இருந்தது. அவர்களது நினைவெல்லாம் தாத்தாவிற்கு நேரத்திற்கு நேரம் உணவு கொடுத்தால் மாத்திரம் போதும் என்பதாகவே இருந்தது. அது மாத்திரம் தாத்தாவுக்குப் போதுமா? ஒரு நாளைக்கு ஒரு வார்த்தைः தாத்தா..... எப்படி சாப்பிட்டீர்களா? உங்களுக்கு என்ன வேண்டும்? என்று அன்பான வார்த்தை கூட பேசமாட்டார்கள்.

ஆனால் அவர்கள் தங்களுக்குள் எப்போதும் எதையாவது குறித்து விவாதிப்பார்கள், சிரிப்பார்கள், சண்டையிடுவார்கள், பின்னர் ஒன்று சேர்வார்கள். இரவு மணிக்கணக்காக இருந்து பேசிக் கொண்டேயிருப்பார்கள். இதையெல்லாம் மூலையிலிருந்து பார்க்கும் தாத்தாவிற்கு ஏக்கமாக இருக்கும்.

ஏனென்றால் அவர் மாத்திரம் என்ன தாத்தாவாகவே மேகத்திலிருந்து குதித்தவரா? இல்லை அவரும் குழந்தையாக இருந்து இளைஞனாக மாறி தகப்பனாகி இப்போது தாத்தாவாகி வாழ்வின் எல்லைக் கோட்டிற்கு வந்துவிட்டார். என்ன செய்வது முதுமை தான் யாரும் விரும்பாமலேயே அவர்களுக்கு கொடுக்கப்படும் சொத்தாகும். ஒரு காலத்தில் அவரும் இவர்களைப் போல இளமையாக இருந்த போது துள்ளிக் குதித்து திரிந்து, அனேக இடங்களுக்கு சென்று வந்தவர். எப்போதும் ஓடியாடி வேலை செய்து சம்பாதித்து பிள்ளைகளைப் பார்த்து, பார்த்து அவர்களுக்கு என்ன வேண்டும்? என்ன தேவை இருக்கின்றது என்று செல்லமாக வளர்த்து ஆளாக்கிவிட்டார்.

இப்போது அவர்களும் வளர்ந்து பெரியவர்களாக வேலை செய்கின்றார்கள், அவர்களும் குடும்பங்களாகி தங்கள் குடும்பங்களை பார்த்து நடத்துகின்றார்கள். ஆனால் தங்களை வளர்த்து ஆளாக்கிய தாத்தாவை மறந்து போனார்கள். அவரோடு ஆறுதலாக ஒரு வார்த்தை பேச அவர்களால் முடிவதில்லை. அதைவிட பேசுவதற்கு என்று அவர்களுக்கு எதுவும் இருப்பதுமில்லை, அவரிடம் ஆலோசனை கேட்பதற்கும் அவர்களுக்கு தேவை ஏற்படுவதில்லை, இவைகளுக்கு நேரமும் அவர்களுக்கு இருப்பதில்லை.

ஆனால் அந்த வீட்டிற்குள்ளே தாத்தாவின் தனிமையின் இருளைப் போக்க சூரியனைப் போன்று ஒருவன் மாத்திரம் இருந்தான். அவன் தான் தாத்தாவின் பேரன். அவன் சிறுவனாக இருப்பதினால் என்னவோ தாத்தாவைச் சுற்றிச் சுற்றியே வருவான். அவன் தாத்தாவிற்கு கதைகள் சொல்லுவான், அவரைக் கட்டி தழுவுவான். எப்போதும் மிகவும் அன்பாக அவருடன் இருப்பான். இது அவருக்கு ஓரளவு ஆறுதலாக இருக்கும்.

இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருந்த போது ஒரு நாள்..... வழக்கம் போலவே எல்லோரும் நித்திரைக்கு சென்றார்கள். தாத்தாவும் தன் படுக்கையில் தூங்கப்போனார். இரவு தூங்கச் செல்லும் முன்னர் பேரன் தன்னைக் கட்டி அணைத்து கொடுத்த முத்தத்தை மறுபடியும் மனதிற்குள் அசை போட்டவராய் தூங்கினார். பாவம் அது தான் அவருக்கு இறுதி தூக்கம் என்பதனை அவர் அறிந்திருக்கவில்லை.

அடுத்த நாள் காலையில் எல்லோரும் வழக்கம் போலவே தூக்கம் விட்டு எழுந்தனர். ஆனால் தாத்தா மாத்திரம் எழுந்திருக்கவில்லை. அவர் அப்படியே நிரந்தரமாகவே உறங்கிப் போனார். அவர் இறந்த போது அந்த வீட்டிலே இருந்த அனைவரும் கட்டிப் புரண்டு கதறி அழுது தாத்தா மீது தாங்கள் வைத்த பாசத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர் உயிரோடு இருக்கும் போது ஆறுதலாக ஒரு வார்த்தை! அன்பாக ஒரு வார்த்தை! சொல்லாதவர்கள் இப்போது கதறி

கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தனர். பாவம்! ,தாத்தா அவருக்கு இப்போது எதுவுமே புரியப்போவதில்லை. அவர் ஆழ்ந்த நிரந்தர உறக்கத்திலிருந்தார்.

அவரது இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது எல்லோரும் அழுது புலம்புவதைப் பார்த்த பேரனுக்கு எதுவுமே புரியவில்லை. தாத்தாவோடு ஒட்டி உறவாடியது அவன் மாத்திரமே! அவன் மிகவும் அமைதியாக ஒரு மூலையில் அமர்ந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு தாத்தாவை எங்கேயோ கொண்டு செல்லப் போகின்றார்கள்! அவர் எப்போது மறுபடியும் வருவார் என்று நாடியில் கை வைத்து சிந்தனையில் மூழ்கத் தொடங்கினான். அப்போது தாத்தாவை அடக்கம் செய்வதற்காக எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

ஆம் நண்பர்களே! இந்த வீட்டைப் போன்று எத்தனையோ வீடுகளில் முதிர்ந்தவர்கள் ஏக்கத்தோடு வீட்டு மூலைகளில் உறங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்களோடு எத்தனை பேர் அன்பான வார்த்தைகளைப் பேசியிருக்கின்றோம்? அவர்களுக்கு ஆறுதலாக ஒரு வார்த்தை கூறியிருக்கின்றோம்? எத்தனை பேர் அவர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கின்றோம்? அவர்களுக்கு நாம் கொடுக்கும் உணவு மாத்திரம் போதுமா? இல்லை நண்பர்களே அவர்களுடன் நாம் பேசும் ஒவ்வொரு அன்பான வார்த்தைகளும் அவர்களுக்கு நல்மருந்தாகவே இருக்கும். பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது: **எபேசியர் 6:2-3 (2.) உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் 3. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.** அவர்களை நாம் கனம்பண்ணினால் தான் நமக்கு நன்மை உண்டாயிருக்கும் என்பதனை எத்தனை பேர் புரிந்து கொள்கின்றோம்?

வை. விமல்

# குறுக்கெழுத்துப் போட்டி – 65

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. தானியேல் - தானி 7:15
04. சவுலைப் - 1சாமு 15:28
07. சாலொமோன் - 1இரா 3:26-28
10. சத்தியமும் - நீதி 14:22

**வலமிருந்து இடமாக**

02. எஸ்றா - எஸ்றா 9:6
03. பினெகாசின் - 1சாமு 4:21
05. யோராம் - 11இரா 9:24
08. எக்லோன் - நியா 3:12-13
12. யோகெபேத் - எண் 26:59

**மேலிருந்து கீழாக**

01. தாற்றுக்கோல்கள் - பிர 12:11
02. எலியாக்கீம் 11இரா 23:34
03. பிலிப்பு - மத் 10:3
06. ஊசா - 11சாமு 6:6

**கீழிருந்து மேலாக**

09. யெஷூரன் - எண் 32:15
11. பெசலெயேல் - யாத் 31:2-5



# பராக்கிரமசாலியே!



**தே**வ ஜனத்தின் மீறுதல் பெருகும் போது, அவ்வப்போது தேவன் ஜனங்களைப் பல வழிகளில் சீர்படுத்த அல்லது தன்னிடமாய் மீளவும் சேர்த்துக் கொள்ள பல வேளைகளில் தன் கரத்தினால் மீட்ட ஜனத்தையும் புறஜாதிகளின் கை களில் விற்றுப் போடுவதை வேதத்தில் பார்க்கலாம்.

**கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப் பானதை இஸ்ரவேல் புத்திரர் செய்தபடியால் கர்த்தர் அவர்களை ஏழு வருஷம் மீதியானி யர் கையில் ஒப்புக்கொடுத்தார். நியாயாதி பதிகள் 6:1**

இந்த நிலையிலும் அவர்கள் கர்த்தர் பக்கமாய் திரும்பாமல் மலைகளிலுள்ள கெபிகளையும், குகைகளையும், அரணான ஸ்தலங் களையும் அடைக்கலங்களாக்கிக் கொண்டார்கள்.

தேவனைச் சார வேண்டிய வர்கள், தேவனிடம் திரும்ப வேண்டிய வர்கள், தங்கள் பாது காப்பிற்காகவும், விடு தலைக் காகவும் வேறு வழிகளைக் கைக்கொண் டார்கள். எனவே தொடர்ந் தும் மீதியானியரின் கை ஓங்கியபடியே இருந்ததி னால் இஸ்ரவேலரின் தானியங்களும், சொத் துக்களும் அவர்கள் வச மாக நாளுக்கு நாள் கடந்து போய்க் கொண் டிருந்த நிலையிலே, சிறுமைப்பட்டவர் களாக கர்த்தரை நோக்கி

முறையிட்டார்கள். **தேவன் அவர்கள் முறையீட்டை செவி சாய்த்தவராக ஒரு இரட்சகனை எழும்பப்பண்ண தீர்மானிக் கின்றார். அவன் தான் கிதியோன்!.**

பயந்து போய் நடுங்கிக் கொண்டு மீதியானியருக்கும், அவர்கள் சேனைகளுக்கும் பயந்தவனாக கோதுமையை மீதியானியரின் கைக்கு தப்புவிக் கிறதற்காக ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான். **உயிரைக் கையில்பிடித்தவனாக தன்னால்இயன்றதை செய்ய வந்த கிதியோனை தேவன் கண்ணோக்கினார். அவனைப் பார்த்து பராக்கிரமசாலியே என தேவன் அழைத் தார். அழைத்தது மாத்திரமல்ல அனைத்து மீதியானியரின் கையிலிருந்தும் நீ தான் என் ஜனத்தை இரட்சிக்க (விடுவிக்க) வேண்டும் என்றும் அழைத்தார். இதைக் கேட்ட கிதியோன் ஆண்டவரே, எம்மாத்திரம். இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரி லும்சிறியவன் என்றான் (நியாயாதிபதிகள் 6:15)**

நீ எப்பேற்ப்பட்ட குடும்பப் பின்ன ணியைக் கொண்டிருந்தாலும், எந்த நிலைமையில் இருந்தாலும் தேவன் உபயோகித்து மகிழ ஆயத்தமுள்ள வராய் இருக்கிறார், ஒதுங்கிவிடாதே! அதைரியப்படாதே! தேவன் உன்னை அழைக்கும் போது காரணங்களைக் காட்டி அழைப்பை அலட்சியப் படுத்தாதே. எத்தனை ஆயிரம் ஆயிரம் மக்கள் இன்று சாத்தா னின் ராஜ்யத்திலும் அவனின் கைக்கூலியாகவும் இருந்து விடு கின்றனர். நாளுக்கு நாள் பாவத்தி லேயும், சத்துருவின் கட்டிலேயும் இருக்கும் மக்களை மீட்க தேவன **உன்னை இன்றே அழைக் கின்றார்!. இன்று நீ தான் அந்த பராக்கிரம சாலி! எழுந்து வா! இயேசுவின் சுவிசேஷம தனை முழங்கிட, சத் துருவினால் விலங் கிடப்பட்டு, குருட்டாட் டத்திலே வாழும் மக் களை விடுவித்து, தேவ** ராஜ்யத்திற்குள் நடத்த. அவரின் பெரிய தோட்டத் திலே அறுவடை மிகுதி என்று உரைத்த ஆண்டவ ரின் ஆவலை தீர்க்க விரைவாயா?

**உன்னுடைய பெலவீனங்களில்**

**அவருடைய கிருபை விளங்கும்.**






ஆண்டவர் இயேசுவின் அன்பின் வார்த்தைகள். இவைகள் தன்னை நம்பி தனக்கு செவி கொடுக்கின்ற மனிதனுக்கு அவர் தான் விரும்புகின்றதைக் கொடுக்க ஆயத்தமுள்ளவராய் இருக்கின்றார்.

தகப்பன் தன் பிள்ளை அப்பத்தை கேட்டால் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்கு பாம்பைக் கொடுப்பானா? நீங்களே (உலக தகப்பன்மார்களே) உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திலிருக்கும் தேவன் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையான வைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?



உன் தேவைகளை அவர் அறிவார், அறிந்திருக்கிறார். முழு விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் ஆண்டவரிடம் கேட்பாயா? வியாதியா? கஸ்டமா? தேவைகளா? ஆண்டவரின் அன்புவார்த்தை உங்களுக்கு போதுமான தாகும்.

**கேட்கிறவனுக்குக் கொடுக்கப்படும்!**

ரோமா







- எவள் இருந்த வீடு?
- யார் அந்த தேவ தூதன்?
- ஏன் தேவ தூதன் பிரவேசித்தான்?

**லூக்கா 1:28a அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து:...** அவள் தான் யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த கன்னிகையாகிய மரியாள் இருந்த வீடு.

யார் அந்த தேவ தூதன்? அவன் தான் கபிரியேல் என்னும் தேவ தூதன். அவன் தேவனால் அனுப்பபப்பட்டவன்.

ஏன் தேவ தூதன் அவளுடைய வீட்டிற்குள் பிரவேசித்தான்? தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு செய்தியை கொடுத்து வாழ்த்தும்படியாய் தேவ தூதன் அவள் இருந்த வீட்டிற்குள்ளே பிரவேசித்தான். வீட்டில் மரியாள் இருந்த படியால் தேவ தூதன் அவ் வீட்டிற்குள் பிரவேசித்து அவளை வாழ்த்தினான். இன்று நாமும் நமக்கென்று நியமிக்கப்பட்ட வீட்டில் இல்லாமல், எம்முடைய சொந்த வீட்டை கவனிக்காமல் ஊரைச் சுற்றித் திரிந்தால் நல்ல சந்தர்ப்பததை தவறவிட்டுவிடுவோம்.

> “ ”
> வீட்டில் மரியாள் இருந்தபடியால் தேவ தூதன் அவ் வீட்டிற்குள் பிரவேசித்து அவளை வாழ்த்தினான். இன்று நாமும் நமக்கென்று நியமிக்கப்பட்ட வீட்டில் இல்லாமல், எம்முடைய சொந்த வீட்டை கவனிக்காமல் ஊரைச் சுற்றித் திரிந்தால் நல்ல சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிடுவோம்.
>
> [redacted]

கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் ஊரில் பல கன்னிகைப் பெண்கள் இருந்திருக்கலாம். ஆனால் இந்த மரியாள் மட்டுமே தேவனுடைய பார்வையில் கிருபை பெற்றாள். எப்படி இவள் மட்டும் தேவ கிருபையைப் பெற்றிருக்கலாம் என்று சகோதரியே நீ சிந்திக்கின்றாயா? இவள் இருந்த வீட்டுச் சூழ்நிலையும், இவளுடைய வாழ்க்கையும் தேவனுக்கு பிரியமாய் இருந்தபடியினால் தான் தேவ தூதன் அவள் இருந்த வீட்டில் பிரவேசித்து கிருபை பெற்றவளே வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்ற வாழ்த்தைக் கொடுக்கின்றான்.

சகோதரியே நீ இப்போது குடியிருக்கும் உன் வீட்டைச் சுற்றி உன் கண்களினால் பார்ப்பாயாக: என்ன உன் கண்களுக்கு தெரிகின்றது? மற்றவர்களை ஏமாற்றி வாங்கிய பொருட்கள் உண்டா? இரவலாக பெற்றுக் கொண்ட பொருட்கள் இன்னமும் திரும்ப கொடுக்கப்படாமல் இருக்கின்றதா? கடனாக பெற்றுக் கொண்ட பொருட்களிற்குரிய பணம் இன்னமும் செலுத்தப்படாமல் இருக்கின்றதா? வட்டியாக பெற்றுக் கொண்ட பணம் அலுமாரிக்குள் அடுக்கப்பட்டிருக்கும் சேலைகளுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றதா? சினிமா ஒலி/ஒளி தட்டுக்கள் (CD/DVD), வேண்டத்தகாத பத்திரிகைகள், புத்தகங்கள் உன் போதகர்மார்களின் கண்களிற்கு தெரியாமல் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றதா? உன் வீட்டை நீயாகவே பார்வையிடுவாயா?

அது மாத்திரமல்ல, உன் வீட்டில் கேட்கும் தேவையற்ற சத்தங்கள் என்ன? சண்டையின் சத்தமா? கெட்ட வார்த்தைகளா? சினிமா பாடல்களா? நாடகச் சத்தங்களா? ஓயாத தொலைக்காட்சியின் சத்தமா? அல்லது நீயும் உன் சிநேகிதிகளும் அரட்டை அடிக்கும் சத்தமா? மற்றவர்களைப் பற்றி கோள் சொல்லி, குறை கூறி, வீண் பழி சுமத்தும் இரைச்சல்களின் சத்தமா? அல்லேலூயா! ஆமென்! சத்தம் கேட்க வேண்டிய உன் வீட்டில் என்ன சத்தம் இன்று கேட்கின்றது என்று சிந்தித்துப்பார்.

அன்றைக்கு தேவ தூதன் மரியாள் இருந்த வீட்டிற்குள் பிரவேசிக்கக் கூடிய சூழ்நிலையில் தான் மரியாளுடைய வீட்டு சூழ்நிலைகள் காணப்பட்டிருக்கலாம். மரியாளுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பார்த்த தேவ தூதன் திடமாய் கூறுகின்றார்: **"கர்த்தர் உன்னுடனே இருக்கின்றார், ஸ்திரிகளுக்குள் நீ ஆசீர்வதிக்கப் பட்டவள்"** என்றான். நாசரேத் ஊரில் இருந்த ஸ்திரிகளுக்குள்ளே மரியாளுடைய வாழ்க்கை தேவனுக்கு பிரியமான வாழ்க்கையாக இருந்தமையால் தான் அவள் தேவனிடத்தில் கிருபை பெற்றாள்.

சகோதரியே, நீ குடியிருக்கும் உன் வீட்டை இதுவரைக்கும் சுற்றிப் பார்த்திருப்பாய். இப்போது உன்னுடைய சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து உன்னை நீயே நிதானித்துப்பார். தேவனுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் உன்னுடைய

வாழ்க்கையில் இடம் உண்டா? இன்னும் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்கள் உன் வாழ்க்கைக்குள் மறைந்து கிடக்கின்றதா? உன்னுடைய நடை, உடை, பேச்சு, உன் அலங்காரம், உன் சிந்தனை, செய்காரியங்கள் எல்லாவற்றையும் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார். உலக நாகரீகம் உன்னை நடத்துகின்றதா? அல்லது தேவனும் தேவனுடைய வார்த்தையும் உன்னை நடத்த விட்டுக் கொண்டிருக்கின்றாயா? சிந்தித்துப்பார்!

> நீ குடியிருக்கும் உன் வீட்டிலும்
> உன் சொந்த வாழ்க்கையிலும்
> பரிசுத்தம் காணப்படட்டும்.
> அன்றைக்கு தேவ தூதன்
> மரியாள் இருந்த வீட்டில்
> பிரவேசித்து அவளை வாழ்க!
> கர்த்தர் உன்னுடனே
> இருக்கின்றார் என்றான்

உன்னுடைய சொந்த வாழ்க்கையில் தேவன் உன்னுடன் கூட இருக்கின்றாரா? அல்லது இருப்பவர் போன்று நீ நினைக்கின்றாயா? உன்னை ஆராய்ந்து பார்க்க ஒரு சந்தர்ப்பத்தை அனல் சஞ்சிகையின் பெண்கள் பக்கம் உனக்கு கொடுக்கின்றது.

தேவன் உன் வாழ்வில் தங்க முடியாத பாவங்கள் இருந்தால் அவற்றை அறிக்கை செய்து இவ் ஆண்டின் ஆரம்ப நாட்களிலே விட்டுவிட தீர்மானம் எடுப்பாயாக.

நீ குடியிருக்கும் உன் வீட்டிலும் உன் சொந்த வாழ்க்கையிலும் பரிசுத்தம் காணப்படட்டும். அன்றைக்கு தேவ தூதன் மரியாள் இருந்த வீட்டில் பிரவேசித்து அவளை வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கின்றார் என்றான் - **லூக்கா 1:30 தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே: நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்.** என்று வாழ்த்தினான்.

தேவன் உன்னுடைய பெயரையும் கூறி: **பயப்படாதே!** என்று கூற விரும்புகின்றாயா? நீ செய்ய வேண்டிய காரியம்: **உன் வீட்டையும் உன் சொந்த வாழ்க்கையையும் தேவனுக்கு பிரியமாய் நீ வைத்துக் கொள்ளும் போது தேவனுடைய கிருபையை பெற்றுக் கொள்வாய்.** கர்த்தர் உன்னுடன் இருந்து பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் என்று உன்னையும் பார்த்துச் சொல்வார். தேவ கிருபை உன்னுடன் இருப்பதாக!

**திருமதி. J.பிலிப்**







**ஆதியாகமம் 21:22 அக்காலத்தில் அபிமெலேக்கும் அவன் சேனாதிபதியாகிய பிகோலும ஆபிரகாமை நோக்கி: நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார்.**

அன்பு சகோதரா, சகோதரி, ஒரு புதிய ஆண்டின் ஆரம்ப நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு தேவனுடைய இரக்கமும், கிருபையும் எத்தனை மேன்மையாக நம்மை நடத்திக் கொண்டு இருக்கின்றது. இதற்கு முதலாவது நாம் தேவனுக்கு நன்றிகளை, ஸ்தோத்திரங்களை தெரிவித்துக் கொள்வோம்.

**ஆதியாகமம் 21:22b நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார்.** தேவன் ஆபிரகாமோடு கூட இருக்கின்றார், ஆபிரகாம் செய்யும் அனைத்து காரியங்களும் வெற்றி அடைகின்றது. இதற்கு காரணம், **"தேவன்"** இந்த தேவன் எப்போதும் ஆபிரகாமுடனே கூட இருக்கின்றார் என்பதனை அபிமெலேக்கும், அவனுடைய சேனாதிப தியும் கண்டு கொண்டார்கள். ஏனெனில் ஆபிரகாமும் முற்றுமுழுவதுமாக தேவனில் தங்கி இருந்தார்.

> " "
> சில வேளைகளில் எமக்குள் மிகப் பெரிய கேள்விகள் எழும்பும். தேவன் எப்படி எமக்குள் இருப்பதை உணர்வது. எப்படி அவரை காணமுடியும். தேவன் யார்? எப்படி அவரை சந்திக்கலாம்?

அருமை சகோதரா, சகோதரி ஆபிரகாமோடு இருந்து வாழ்ந்தது போல் தேவன் எம்மோடும், எமக்

குள்ளும் இருக்கின்றார். சில வேளைகளில் எமக்குள் மிகப் பெரிய கேள்விகள் எழும்பும், தேவன் எப்படி எமக்குள் இருப் பதை உணர்வது, எப்படி அவரை காணமுடியும், தேவன் யார்? எப்படி அவரை சந்திக்கலாம்? எனும் கேள்விகள் மேலெழு வதுண்டு.

ஒரு அழகான மலர்கள் நிறைந்த பூஞ்சோலையில் உடலை சிலிர்க்க வைக்க கூடிய ஒரு தென்றல் வீசுகின்றது. அந்த பூஞ்சோலையில் நின்று ஒருவர் கூறுகின்றார். எங்கே அந்த காற்றை எனக்கு காண்பியுங்கள் என்பதாக. நாம் அவருக்கு காற்றை காண்பிக்க முடியாது. ஆனால் காற்று வீசுவதை அறிந்து கொள்ள செய்ய முடியும். எப்படி மரங்கள், செடிகள் அசைகின்றன. அழகிய நறுமணம் மலர்களில் இருந்து புறப்பட்டு மனதை கவருகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம் அங்கே வீசுகின்ற காற்றே. அசைவுகளும், வீசுகின்ற நறுமணமும் காற்றினை உண்மையாக்குகின்றன.

இதே போன்று: **நாம் தேவனை யாருக்கும் காண்பிக்க முடியாது.** மனிதர்களில் எதிர்பார்ப்பு களிற்கு ஏற்றபடி இயேசுவை யாரிற்கும் நிரூபிக்கவும் முடியாது. ஆனால் எம்மை தேவனிற்கென ஒப்புக் கொடுக்கும் போது எம்மில் இயேசு கிறிஸ்துவினால் உருவா கும் அசைவுகள் பிறரிற்கு உண்மையை விளங்கச் செய்யும். எம்முடைய பரிசுத்தமான வாழ்வு, எம்முடைய நற்கிரியைகள் பலரை கவர்ந்திழுக்கும் நற்குணங்கள் என்பன இனிமையான நறுமணங் கள் எம்மிடம் இருந்து வீசும் போது உண்மையாய் இயேசு கிறிஸ்து இருக்கின்றார் என்பதை மக்கள் உணர்ந்து கொள்வார்கள்.

எனவே தேவன் ஆபிரகா மோடு இருந்ததை அபிமெலேக்கு கண்டான். தானியேலின் வாழ்க்கை யில் தேவன் செயறபடுவதை பாபிலோனின் ராஜா விளங்கிக் கொண்டான். தாவீதோடு கர்த்தர் இருப்பதை இஸ்ரவேல் ஜனங்க ளால் மறுக்க இயலவில்லை. இதே போன்று தேவன் எம்மோடு கூட இருந்து பயங்கரமான காரியங் களைச் செய்வதை பிறருடைய கண்கள், உடன் சூழ உள்ள ஜனங்கள் காண்பார்கள். ஏனென்றால தேவன் தம்முடைய மகிமையை நம்முடைய வாழ்க்கை முறைகள் மூலம் வெளிப்படுத்துகின்றார். எனவே நீ செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் உன்னை தேவனிற் கென்று முழுமையாக அர்ப்பணி.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**உங்கள் அன்பின்**
**J.கிறேசியன்.**




# ★ புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ★

## 02. ஒரு மேய்ப்பன் தன் மந்தையில் அன்புகூர வேண்டும்

**யோவான் 21:15-17 (15.) அவர்கள் போஜனம்பண்ணினபின்பு, இயேசு சீமோன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். 16. இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். 17. மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.** இயேசுவுக்கும் பேதுருவுக்கும் இடையில் நடந்த உரையாடலைக் காணலாம்.

**உம்மை நேசிக்கிறேன் என்ற பேதுருவின் பதிலின் பின் ஆடுகளையும் குட்டிகளையும் மேய்க்கும்படி தேவன் கூறினார்.** இயேசுவின் மீதும் மனித ஆத்துமாக்கள் மீதும் பேதுருவுக்கிருந்த அன்பு அவர்களை மேய்க்க உதவியது. **ஒரு மேய்ப்பன் ஒவ்வொரு ஆட்டிலும் அன்புள்ளவனாக இருக்க வேண்டும்.** ஒவ்வொன்றையும் அன்புடன் பராமரிக்க வேண்டும். **பட்ச பாதம் காண்பிக்க அனுமதிக்கப்படவில்லை.** இந்த ஆடுகள் பட்சபாதம் காண்பிப்பதை உணர்ந்து கொள்ளும் தன்மை உடையது. **எனவே மூப்பர்கள் சபை அங்கத்தவர்களைப் பொறுத்தமட்டில் தேவ அன்பினால் நிரப்பப் பட்டிருக்க வேண்டும்.** ஒரு போதும் பட்சபாதம் காண்பிக்கக்கூடாது.

## 03. மந்தையை போஷிக்க வேண்டும்

ஒரு மேய்ப்பன் தன் மந்தைக்குத் தன்னால் இயன்ற திறமையான போஜனத்தையே கொடுக்க வேண்டும். 23ஆம் சங்கீதத்தில் ஒரு மேய்ப்பன் செய்வதைக் காண்கின்றோம். **சங்கீதம் 23:2 அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். எனவே மூப்பர்கள் சபை அங்கத்தவர்களை புல்லுள்ள இடங்களுக்கும் அமர்ந்த தண்ணீர்கள் அண்டைக்கும் கொண்டு செல்ல வேண்டும்.** இது மூப்பர்களின் கடமை.

**மூப்பர்கள் வேதத்தில் இருந்து நல்ல ஆகாரம் எடுத்துக் கொடுக்க வேண்டும்.** தேவனோடு புதிய அனுபவங்களுக்குள்ளாக நடத்த வேண்டும். **தங்களது ஆத்துமாவுக்குத் தேவையான சரியான ஆகாரத்தை பெற்றுக் கொள்ளவும்.** பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட பரிசுத்த ஆவியானவர் அண்டை நடத்துபவர்களாகவும் காணப்பட வேண்டும். **தண்ணீர், தண்ணீர் நிறைந்த நதிகள் வசனத்தையும், பரிசுத்த ஆவியானவரையும் குறிக்கின்றது.**

## 04. மேய்ப்பன் தன் ஆடுகளைப் பாதுகாக்க வேண்டும்

நல்ல மேய்ப்பராகிய இயேசுவின் சொந்த வார்த்தைகளைப் பார்ப்போம். **யோவான் 10:11-12 (11.) நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். 12. மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்: அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்.**

**தாவீதுக்கு மேய்ப்பனின் இருதயம் இருந்தது.** ஆடு ஆபத்தில் சிக்கிய போது ஆட்டிற்கு உதவி சிங்கத்தையும் கரடியையும் கொன்றான்.

*சிங்கம் - சாத்தான் (1பேதுரு 5:8)*

*கரடி - துஷ்டத்தனம், கொடூரம், தயவற்ற, மிதித்து அழுத்துதல், கசக்கு, பிழி*

**இதனால் இஸ்ரவேலை ஆளும்படி தேவன் தாவீதைத் தெரிந்து கொண்டார்.** சபை ஆபத்தை எதிர்நோக்கும் போது சரியான விதமான மேய்ப்பனும், சரியான மூப்பரும் ஒரே விதமான வழியிலே செயற்படுவார்கள். **இவர்கள் சபையின் அங்கத்தவர்களைப் பாதுகாக்கும்படி அழைக்கப்பட்டவர்கள்.** அங்கத்தவர்கள் தங்களது மேய்ப்பனது, மூப்பனது வழிநடத்துதலின் கீழ் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்பதனை உணர வேண்டும்.

**மூப்பர்கள் அங்கத்தவர்களின் ஆத்துமாக்களைக் கண்காணிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள்.** அத்துடன் தவறான உபதேசம், கள்ள சகோதரர், பக்கவழியாய் நுழைந்த பாதகர், ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்கள், பாவங்கள் போன்ற ஆபத்துக்களில் நின்றும் இந்த ஆத்துமாக்களை கண்காணிக்க வேண்டும். **ஏனெனில் இவைகள் அவர்களது ஜீவனை, விசுவாசத்தை**

அழித்து நாசம் பண்ணிவிடும். மூப்பர்கள் தங்களை மறந்து, சுயநலம் அற்றவர்களாக இருந்து தேவனுக்காகவும் மக்களுக்காகவும் வாழ வேண்டும்.

## 05. தவறு செய்பவனை திருத்துவது, நோய் உள்ளவர்களை குணப்படுத்துவது, தப்பிப்போன பாவியை தேவனோடு சரியான ஐக்கியத்திற்குள் கொண்டு வருதல்.

ஓர் நல்ல மேய்ப்பனைப் பற்றிய விபரணம்: எசேக்கியேல் *34:16*இல் காணலாம். அத்துடன் யாக்கோபு *5:19-20*, *11*தீமோத்தேயு *3:16-17*இலும் காணலாம்.

## 06. உண்மைத்துவம்

**சகரியா 11:17 மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ! பட்டயம் அவன் புயத்தின்மேலும் அவன் வலதுகண்ணின்மேலும் வரும்: அவன் புய முழுவதும் சூம்பிப்போம்: அவன் வலதுகண் முற்றிலும் இருள் அடையும் என்றார்.** புயம் - ஆவிக்குரிய வல்லமை, வலது கண் - ஆவிக்குரிய உட்பார்வை, ஞானம்.

**ஒரு மூப்பன் அல்லது மேய்ப்பன் உண்மையற்றவனாக இருந்தால் தேவன் இந்த விதமாகத்தான் தண்டிப்பார்.** சபைக்கு உதவத்தக்கதான தன் வல்லமையை இழப்பான். **அத்துடன் ஆவிக்குரிய உட்பார்வையையும் ஞானத்தையும் இழப்பான்.** ஒரு மூப்பன் இப்படிப்பட்ட முறையில் தவறினால் அவனை அந்த ஸ்தானத்தில் வைத்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**அதாவது ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சிகுன்றி, சேவை செய்யத்தக்கதான அந்த கிருபையை இழக்கும் போது ஆகும்.** சபையானது இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மற்ற மூப்பர்களுடன் சேர்ந்து அவனை விலக்கிவிடலாம். **தரம் கெடும் மூப்பர்களைக் குறிக்க ஓர் முக்கியமான சட்டம் 1தீமோத்தேயு 5:19-20இல் காணலாம்.** மூப்பரின் பதவி ஆயுட்காலத்திற்குரியது, அதே நேரத்தில் நாம் இன்னொன்றையும் நினைவில் வைக்க வேண்டும். **ஓர் மூப்பன் இன்னோர் இடத்திற்கு இடம்பெயரும் போது அந்த இடத்திலுள்ள சபையின் மூப்பனாக வர தகுதியுடையவர் ஆகின்றார்.**

இது தேவ ஆவியானவரின் நடத்துதலைப் பொறுத்தே தீர்மானிக்க வேண்டும். புதிய ஒரு மூப்பனின் தேவை எப்போதும் அவசியமாக இருப்பதில்லை. **ஒன்று அல்லது இரண்டு மூப்பர்களுக்கு மேல் தேவைப்படாத எத்தனையோ சபைகள் உண்டு.** தேவன் கொடுத்த கிருபையின் அடிப்படையில் யார் மனப்பூர்வமாக சபைக்கு சேவையாற்ற விரும்புகிறார்களோ, **அவர்களுக்கு தேவன் இங்கேயே நல்ல பலன்களைக் கொடுக்கிறார்.** ஆனால் இயேசு மகிமையில் வரும் போது எல்லாவற்றிலும் பார்க்க கனமான பலனைக் கொடுப்பார். **1பேதுரு 5:4 மகிமையுள்ள வாடாத கிரீடம்.**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

தொடரும்...

# குறுக்கெழுத்துப்போட்டி – 66

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 01 | ✞ | | | | | | 02 |
| | | 03 | | | | | ✞ | |
| | | | ✞ | ✞ | | | | 04 |
| 05 | | | ✞ | ✞ | ✞ | ✞ | ✞ | ✞ |
| ✞ | | | | | | 06 | | |
| 08 | ✞ | ✞ | 07 | | | ✞ | | |
| | ✞ | | | | | 09 | | |
| | ✞ | 10 | | | | ✞ | | |
| 11 | | | | ✞ | | | 12 | 13 |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களை தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
- நன்றி -

## இடமிருந்து வலமாக

03. இவன் மெராரியின் பேரன்
07. சாலொமோன் கொடுத்த பட்டணங்களில் பிரியப்படாதவன்
10. இந்தப் பள்ளத்தாக்கு எங்கும் நிலக்கீல் உண்டாகும் கேணிகள் இருந்தது
11. இவளின் செய்கையைப் பற்றி தெபோராள் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருந்தாள்

## வலமிருந்து இடமாக

02. பாகாத் மோவாபின் புத்திரர் இவர்களுடைய சந்ததிக்குள்ளிருந்தார்கள்
04. இவன் ராஜ போஜனத்தினால் தீட்டுப்படாதவன்
06. யோராம், இவனுடைய பாவங்களை விட்டு நீங்காமல் அவைகளில் சிக்கிக்கொண்டிருந்தான் (குழம்பியுள்ளது)
09. இசக்கார் புத்திரருக்கு கிடைத்த நாட்டின் எல்லையிலுள்ள ஒரு பட்டணம்
12. இஸ்ரவேலை எண்ணத்துவக்கியும் முடிக்காதே போனவன்

## மேலிருந்து கீழாக

01. கர்த்தரிடத்தில் திரும்பாதபடி தன் கழுத்தை அழுத்தமாக்கி, தன் இருதயத்தைக் கடினப்படுத்தியவன்
02. இவன் இஸ்ரவேலை 6வருடம் நியாயம் விசாரித்தான்
03. யோசுவாவால் பிடிக்கப்பட்ட பட்டணத்தில் ஒன்று
08. நான் முன் ஒரு போதும் ராஜாவின் சமுகத்தில் துக்கமுகமாய் இருந்ததில்லை எனக்கூறியவன்

## கீழிருந்து மேலாக

04. "இனி என்னில் பெலனில்லை என்னில் மூச்சுமில்லை" எனக் கூறியவன்
12. காத் ஊரிலிருந்த ஒரு இராட்சதனை இவன் வெட்டிக் கொன்றான்
13. தன் ஜனங்களுடைய நன்மையை நாடி தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசியவன்




## வேதப்பகுதி: IIIயோவான் 11-14

சினேகாவின் குடும்பம் பக்தியானது. சினேகா தினமும் ஜெபம் செய்வாள், வேதம் வாசிப்பாள், தவறாமல் சர்ச்சுக்குப் போவாள். சண்டே ஸ்கூலில் கலந்து கொள்வாள். ஆனால் பொய்யும் பேசுவாள், சண்டை யும் போடுவாள். டிவி யில் சினிமாவும் பார்ப்பாள், மிக ஆடம்பரமாக உடை உடுப்பாள். இயேசுவின் மேல் பக்தியாயிருக்கிற நீ ஏன் இப்படி இருக்கிறாய்? என்று அவளுடைய தோழி கேட்டாள். எங்க அம்மா அப்பா ஜெபம் செய்வார்கள், சர்ச்சுக்கு போவார்கள். ஆனால் அவர்கள் சண்டை போடுவார்கள், பொய் பேசுவார்கள், எப்பொழுதும் டி.விக்கு முன்னால் இருப்பார்கள் என்றாள் சினேகா.

**சிலர் தவறான பக்தி வாழ்க்கை வாழ்கின்றார்கள். அப்படி வாழ்கின்றவர்கள் உங்கள் பெற்றோராயிருந்தாலும் அவர்களை பின்பற்றக் கூடாது. பக்தியாயிருந்தும் பொய் பேசி, சண்டை போட்டு, ஆட்பரமாயிருந்தால் அவர்கள் தவறு செய்கிறார்கள். அவர்களின் தவறை நீங்கள் செய்யாமல் இயேசுவைப் பின்பற்றுங்கள்.**



**சிந்தனைக்கு:- சரியாக வாழாதவர்களின் தேவபக்தி வீணானது: அவர்களை நீ பின்பற்றாதே!**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – நவம்பர் 13




## சூசன்னா

### 1669 – 1742

### ஜெபத்தில் மலரும் முத்து



இறைப்பற்று மிக்க இனிய குடும்பத்தில் பிறந்தார் சூசன்னா. அழகும், அறிவும், ஆற்றலும் நிறைந்தவர். இளமையிலேயே முத்துக்களைப் பார்க்கிலும் விலையேறப் பெற்ற குணங்களை தன்னகத்தே கொண்டிருந்தார். நல்ல நூல்களைக் கற்ற சிந்தனையாளர்.

சாமுவேல் வெஸ்லி என்பவரின் அன்பு மனைவியாக, ஆவியின் கனிகளைப் பெற்று, இறைமணம் கமழ இல்லறத்தில் இனிதே வாழ்ந்தார்.

இங்கிலாந்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஜான் வெஸ்லி என்பவரின் அன்புத் தாயாரே இவர்.

**சூசன்னா வெஸ்லி ஓர் சிறந்த ஜெப வீரர். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்ற பழமொழிக்கேற்ப தன் குழந்தைகளைச் சிறுபிராயம் முதற்கொண்டே பக்தியிலும், தெய்வீக அன்பிலும், ஜெப சிந்தையிலும், தாராள குணத்திலும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்த்தார். ஒவ்வொரு குழந்தையும், ஒரு வாரத்தில் ஒரு மணிநேரம் என தன்னைச் சந்திக்க ஒழுங்கு செய்திருந்தார். இவர் தன் பிள்ளைகளுக்கு உயரிய கல்விகளை அளித்து, திருமறைக் கல்வியிலும், கிறிஸ்தவ நெறிப் பயிற்சியிலும் பயிற்றுவித்தார்.**

கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றியதின் நிமித்தம், கணவர் சாமுவேல் ஒரு முறை சிறை செல்ல வேண்டியிருந்தது. அண்டை வீட்டார்

சண்டை செய்து, துன்பத்தைக் கொடுத்தனர். வீட்டுத் தோட்டத்தை நாசம் செய்தனர், பசு மாடுகளைக் கத்தியால் குத்திக் கொன்றனர். இதனால், சூசன்னாவின் பிள்ளைகள் உடல் மெலிந்து வறுமையடைந்தனர். அடுக்கடுக்காகப் பல துன்பங்கள் வந்து குவிந்த போதிலும், இத் தாயார் தன் விசுவாசத்தை விட்டுவிடாமல், முழங்கால்களை ஊன்றி இறைவனிடம் ஜெபிப்பதில் உறுதியாயிருந்தார்.

தான் குடியிருந்த வீட்டிற்கு முரடன் ஒருவன் தீ வைத்த போது, சூசன்னாவின் ஜெபத்தினால் குழந்தைகள் அனைவரும் காக்கப்பட்டனர். ஜான் வெஸ்லி என்ற மாமனிதரும், அவர் சகோதரருமான சார்லஸ் வெஸ்லியும் இத் தாயாரின் ஜெபத்தினாலேயே மாபெரும் சுவிசேஷகர்களாக இப் புவியில் அநேகமாயிரம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த முடிந்தது.

**அன்பரே! உங்கள் ஜெபத்தினால் எத்தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: எனக்கு மரணம் நேர்ந்தால் நீங்கள் அழுது புலம்ப வேண்டாம். மாறாக, இறைவனின் திருமுன்னர் ஒரு ஆத்துமாவை பாடலோடு அனுப்புங்கள் — சூசன்னா வெஸ்லி.**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 06*



# கேத்தரின் பூத்

## 1829 – 1890

## நீங்களே உலகின் ஒளி

"குடி குடியைக் கெடுக்கும்: குடிப் பழக்கம் வீட்டைக் கெடுக்கும்: மது நாட்டுக்கும் வீட்டிற்கும் கேடு" இந்த வாசகங்களை நாம் கேட்டிருக்கலாம், அல்லது பார்த்திருக்கலாம். தெரிந்து பலர் தவறு செய்வது போல் அநேகர் அறிந்தே இக் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிக் காணப்படுகின்றனர்.

கேத்தரின் பூத், மக்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமைகளாகிக் கிடந்ததைக் கண்டு, மனம் வருந்தினார். அவர்களை மீட்டு சரியான வழிகாட்ட வாஞ்சை கொண்டார்.

**12வயதிற்குள் 8 முறை வேதாகமத்தைப் படித்ததினால் தைரியத்தையும், தெளிவையும் பெற்றிருந்தார் கேத்தரின். ஆண்டவரின் கரம் தன்னோடு இருப்பதை உணர்ந்தார். குடிபோதைக்கு எதிராக பல கைப்பிரதிகளை எழுதினார். மக்கள் வாழ்வைக் கண்டித்தார். மகிழ்ச்சியான வாழ்வை எடுத்துரைத்தார். 1855 ஆம் வருடம் வில்லியம் பூத்துடன் தன் வாழ்வை இணைத்துக் கொண்டார். ஆண்டவரின் திட்டம் இத் தம்பதியினர் மூலம் அழகுற நிறைவேறத் தொடங்கியது.**

"பெண்களின் ஊழியம்" என்ற புத்தகத்தை கேத்தரின் எழுதி வெளியிட்டார். இதில் ஊழியத்தில் பெண்கள் எவ்விதம் செயற்பட வேண்டும் என்பதையும், அதன் முக்கியத்துவத்தையும் உணர்த்தினார். இவரின் அனலுள்ள பிரசங்கத்தால் அநேகப் பெண் பிரசங்கியார்கள் எழும்பி, தேசத்தை அசைத்தனர்.

கேத்தரின் ஓர் கருத்துள்ள ஸ்திரீயாகவும், நடைமுறைக் கிறிஸ்தவராகவும், ஜெபத்தில் சிறந்தவராகவும் அனுதினமும் தன்னைக் கிறிஸ்துவுக்குள் புதுப்பித்தவராகவும், தன் கணவரின் "இரட்சண்ய சேனை" ஊழியத்தில் சிறந்த ஆலோசகராகவும் செயற்பட்டார்.

"சேனையின் தாயார்" என்று அழைக்கப்பட்ட இவரால் இங்கிலாந்தில் "விபச்சாரத் தடுப்புச் சட்டம்" கொண்டுவரப்பட்டது. இதனால் ஒழுக்கமுள்ள வாழ்வு வாழ மக்கள் தூண்டப்பட்டனர்.

**அன்பரே! சமுதாயச் சீர்கேட்டை மாற்ற உமது பங்களிப்பு என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: முன்னேறிச் செல்லுங்கள், பரிசுத்த வாழ்வு வாழுங்கள், ஒருவரையொருவர் நேசியுங்கள் — கேத்தரின் பூத்**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 17*

## வினா விடை

## சரியான விடை எழுதியவர்கள்

குறுக்கெழுத்துப் போட்டி - 65

01. சி.எப்சிபா - மீசாலை
02. சி.அபிகாயில் - மீசாலை
03. சி.அம்பாள் - மீசாலை
04. மேவின் பிரான்சிஸ் - மானிப்பாய்
05. கஸ்தூரி பிரான்சிஸ் - மானிப்பாய்

- 67 -

# வினா விடை - 68

01. வனாந்தரத்தில் பிரசங்கம்பண்ணினது யார்?

02. சகல ஜனங்களாலும் கனம் பெற்ற ஒரு நியாய சாஸ்திரி யார்?

03. அடிக்கடி தீயிலும் தண்ணீரிலும் விழுந்து வந்தவன் யார்?

04. மூன்று நாள் கொள்ளை நோய் உண்டானதெங்கே?

05. வனாந்தரத்திற்கு ஓடிப்போனவள் யார்?

06. பரிசுத்த ஆவியானவரால் வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்டவர் யார்?

07. நியாய சாதுரியனாயிருந்த ஒரு மனுசன் யார்?

08. பிசாசினால் வனாந்தரங்களுக்கு துரத்தப்பட்டிருந்தவன் யார்?

09. வனாந்தரத்தில் குடியிருந்தவன் யார்?

10. கர்த்தருடைய ஆவியானவரால் பூமிக்கும் வானந்துக்கும் நடுவே கொண்டு போகப்பட்ட தீர்க்கதரிசி யார்?

## வினாவிடை - 67
## சரியான பதில்கள்

01. நோவா - ஆதியாகமம் 9:20-27

02. லவோதிக்கேயா - வெளிப்படுத்தல் 3:14-22

03. அப்போஸ்தலனாகிய பவுல் - கலாத்தியர் 6:5

04. சாமுவேல் 1சாமுவேல் 9:22

05. மல்கியா - மல்கியா 3:16

06. ராகேல் - ஆதியாகமம் 30:22

07. சூலமித்தியாள் - உன்னதப்பாட்டு 2:14

08. சிலுவையில் அறையப்படுதல் - லூக்கா 23:31

09. இயேசு - மத்தேயு 10:35-36

10. அறிவு, ஞானம் - நீதிமொழிகள் 2:10, 24:14




**அப்போஸ்தலர் 9:6[a] அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான்.** தேவன் எங்களுடைய வாழ்க்கையில் அதிகாரம் செய்வதற்கு விட்டுக் கொடுப்பது அல்லது "எங்களுடைய சொந்த சிந்தனையில்லாமல் தேவன் தன்னுடைய விருப்பத்தை எங்களுடைய வாழ்க்கையில் செய்ய அதற்கு அனுமதிக்கும் போது தேவசித்தம் எம் வாழ்வில் செயலாற்ற விடுகிறோம்.

ஏராளமான தேவனுடைய விருப்பங்கள், வேதாகமத்தில் வெளிப் படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த சித்தத்தை நிறைவேற்றுவதற்காக தேவன் எப்படி செயலாற்றினார், எங்களுடைய வாழ்க்கையில் தேவ சித்தம் நிறைவேற்ற எப்படி செயலாற்றுகின்றார் என்று காணலாம். தேவ சித்தம் செய்வதற்காய் தேவன் தெரிந்து கொண்ட வரிகளில் சில நபர்களும், நடத்திய வழிகளும்.

### 01. தேவ சித்தம் நிறைவேற தனிமையின் வழியில் தேவன் நடத்தினார்

தேவனுடைய சித்தம் நிறைவேற்றுவதற்காய் தேவன் தனிமையின் வழியை ஆபிரகாமுக்குக்

காண்பித்தார். "நாங்கள் தனிமை யாக, சொந்தங்களை விட்டு இருப்பது என்பது மிகவும் கடினமான காரியம். ஆனால் ஆபிரகாமை தேவன் தன்னுடைய சித்தம் செய்வதற்காக கூறிய வார்த்தை: **ஆதியாகமம் 12:1-3 (1.) கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. 2. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்: நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். 3. உன்னை ஆசீர் வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.** ஆபிரகாமை அழைத்த இந்த நேரத்திற்கு முன்பதாக எத்த னையோ ஆண்டுகள் தேவனை குறித்த வெளிப்பாடுகள் இல்லா மல் இருந்தது, அந்த அளவுக்கு இருள் சூழ்ந்த ஒரு நிலை. இப்படி யான ஒரு காலத்தில் தான் தன்னு டைய விருப்பத்தை தேவன் ஆபிரகாமுக்கு சொல்கின்றார். இது தேவனுடைய விருப்பம், தன்னுடைய காரியத்தை நிறை வேற்றும் படி கூறிய வார்த்தை.

தேவன் சொன்ன போது எங்கே செல்வது? எப்படிச் செல் வது? எப்படி வாழப்போகின் றேன்? எதுவும் தெரியாது. ஆனால் தேவன் சொன்ன

**" "**
**தேவனுடைய சித்தங்கள் வித்தியாசமான விளைவுகளை, தாக்கத்தை ஏற்படுத்த முடியும். இணைவது மட்டும் தான் தேவ சித்தம் என்று நினைக்கின்றோம். தேவன் சொல்கின்ற போது, வார்த்தைகளை கேட்டு, கீழ்ப்படிந்து, பிரிவதும் தேவனுடைய சித்தம்.**

மாத்திரத்தில் கீழ்ப்படிந்து சென் றான். "தேவனுடைய சித்தங்கள வித்தியாசமான விளைவுகளை, தாக்கத்தை ஏற்படுத்த முடியும். இணைவது மட்டும் தான் தேவ சித்தம் என்று நினைக்கின்றோம். தேவன் சொல்கின்ற போது, வார்த் தைகளை கேட்டு, கீழ்ப்படிந்து, பிரிவதும் தேவனுடைய சித்தம்." வேதத்தில் எத்தனையோ மக்கள் தேவனுக்காய் எத்தனையோ காரியங்களை இழந்திருக்கின்றார் கள். தங்களுடைய சந்தோஷங் களை எல்லாம் புறம்பே தள்ளி, தேவனுடைய விருப்பம் செய்வ தற்காய் உபத்திவரங்களை தெரிந் திருக்கின்றார்கள். தேவ சித்தம் நிறைவேற்றுவதற்காய் தங்களு டைய ஜீவனையும் கொடுத்திருக் கிறார்கள். எங்களுடைய வாழ்க் கையில் நல்ல வேலை கிடைத்தால் தேவ சித்தம் என்போம், வேலையை விட்டு நிறுத்திவிட்டால் சித்தம இல்லை என்கின்றோம. ஆனால்

வேலை இல்லாமல் போவதும் தேவ சித்தமாய் இருக்கலாம். தங்களுடைய நிரந்தரமான வேலைகளை விட்டு தேவனுடைய சித்தம் நிறைவேற்றிய மக்கள் உண்டு.

சிலவேளை நன்மையாய் வருவதும், நன்மையை நாடி நாம் ஓடுவதும் தான் தேவ சித்தம் அல்ல: மாறாக தேவ சித்தம் என்ற சத்தம் கேட்கப்படுகின்ற போது நன்மை என்று தெரிவதையும் விட்டுவிட ஆயத்தமாகி தேவ விருப்பம் செய்ய விரும்புவது தான் தேவ சித்தம். உங்களுடைய வருமானத்தை வைத்து ஒரு நாளும் தேவ சித்தத்தை அளக்க வேண்டாம். மிதமிஞ்சிய பணத் திலே இருப்பது தான் தேவன் ஆசீர்வதிக்கின்றார் என்று அல்ல, அந்த நாளுக்கு அதினதின் பாடு போதும என்று இயேசு சொன்னார். உங்களுடைய வாழ்க்கையில் வறுமையில், பசியில், எதிர்காலத் திற்குரிய தேவைகளோடு இருக்கலாம். ஆனால் தேவன் அனு தினமும் உங்கள் தேவைகளைச் சந்திக்கின்றார் என்பதனை நினைத்து மகிழ்ச்சி அடையுங்கள். ஆபிரகாம் தான் இருந்த ஸ்தானத்தை அல்ல தேவ சித்தம் தான் முக்கியம் என்று எண்ணினான். சாது சுந்தர்சிங் என்று சொல்லப்பட்ட தேவ மனிதன் தேவன் மீது வைத்த விசுத்தின் நிமித்தமாக தன் குடும்பத்தை விட்டே துரத்தப் பட்டார். குடும்பத்தை விட்டு துரத்தப்படுவது தேவசித்தமா? என்று நீங்கள் சிந்திக்கலாம். தேவனுக்காய் தனிமையாய் தேவ சித்தம் நிறைவேற்ற அவர் புறப்பட்டார். உறவுகளை விட்டு

பிரிந்திருப்பது தேவ சித்தமா? என்று நீங்கள் சிந்திக்காதீர்கள். உறவுகளை விட்டு பிரிந்திருப்பது தேவ சித்தம் தான்.

சிலவேளை உறவுகள் கூட தேவ சித்தத்திற்கு தடையாக வரலாம், உறவுகளை இழக்கின்றோம் என்றால், அது தேவ சித்தத்திற்காகத்தானா? என்பதனை நிச்சயப்படுத்தி கொள்ளுங்கள். அப்படி வந்தால், இறுதி வரை கர்த்தர் நடத்துவார். உங்களுடைய குடும்பத்திலே நீங்கள் ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டிருக்கலாம், அதனால் தாங்க முடியாத வேதனையை நீங்கள் அனுபவிக்கலாம். ஆனால் நல்ல செய்தி என்னவென்றால்: தேவ சித்தப்படியே உங்களுக்கு பாடுகள் வருகின்றது. சோர்ந்து போகாமல், மனமடிவாகாமல் அதை ஏற்றுக் கொள்ளுங்கள். வெளிச்சம் அணைந்து போகவிடவேண்டாம். உங்களுடைய சந்தோஷம் குன்றிப்போக விடவேண்டாம்: மாறாக வருகின்ற நெருக்கங்கள், வேதனைகள், துன்பங்களை சந்திக்கின்ற போது நிச்சயமாக தேவ சித்தத்தை நிறைவேற்றுகின்றீர்கள். ஆபிரகாம் தனித்தனவனாய் தேவ சித்தம் நிறைவேற்ற செயலாற்றினான். நீங்களும் தனித்தவர்களாக தேவ சித்தம் நிறைவேற்ற முடியும். உங்களுடைய குடும்பத்தவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்படத்தக்கதாய், உங்களுக்கு வருகின்ற பாடுகள், வேதனைகளை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்குள்ளே தேவ சித்தம் அடங்கியிருக்கின்றது. இன்றைக்கு நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாய் இருப்பதற்கு அன்றைக்கு ஆபிரகாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற துணிந்து காலடி எடுத்து வைத்தது காரணமாய் இருக்கின்றது. தேவனைக் குறித்த வெளிப்பாடு இல்லாத நேரத்தில் தேவ சத்தம் கேட்டு தன் தேசத்தையும், தன் இனத்தையும், தகப்பன் வீட்டையும் விட்டு புறப்பட்ட அந்த செயல் தான் நாங்கள் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாய் இருப்பதற்குரிய காரணங்களில் ஒன்றாகும்.

தனக்கென்று ஒரு ஜனக் கூட்டத்தை உருவாக்கும்படி தேவன் முதலாவதாக பிரித்தெடுத்த மனிதன் ஆபிரகாமே. தேவனுக்காக உயர்வுகள், அவருடைய நாமம் மகிமைப்பட வேண்டிய சந்தர்ப்பங்களின் ஆரம்பங்களைப் பார்க்கின்ற போது தேவனுக்காய் தனிமைப் படுத்தப்பட்டு, உறவுகளை விட்டுபபிரிந்து சென்றதே இன்றைக்கும் ஆண்டவருடைய நாமம் மகிமைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆபிரகாம் கீழ்ப்படிந்தான், தனிமையாக்கப்பட்டான் நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்று சொல்லி சந்தோஷப்படுவதன் ஆரம்பத்தைப் பார்த்தால் ஆபிரகாம் தனிமையின் வழியில் தேவனுக்காக பிரிந்து சென்றான். செய்கின்ற பாவங்களில் இருந்து எத்தனை பேர் வெளியே வர

ஆயத்தமாய் இருக்கின்றோம்? பாவம் செய்கின்றவர்களோடு கூடி இருப்பதைவிட்டு, எத்தனை பேர் வெளியே வர ஆயத்தமாய் இருக்கின்றோம்? ஆபிரகாமைக் குறித்து சொல்லப்படும் போது அவனுடைய தகப்பனார் விக்கிரகங்கள் செய்கின்றவர் என வரலாறுகள் கூறுகின்றன. அப்படிப்பட்ட இடத்தில் உன் தகப்பன் வீட்டை விட்டு வெளியே வா என்று சொல்லும் போது அவன் வெளியே வந்தான். எத்தனை ஒரு பெரிதான தியா கத்தை அவன் செய்தான். தனிமை என்று சிந்திக்கின்ற போது ஆண்ட வருக்காய் எப்படி பிரியமாய் வாழ்வது, எப்படி தேவ சித்தம் செய்வது என்பதனை ஆபிரகாம் செய்தான்.

> "
> தேவ சித்தம் என்ன என்பதனை அறிந்து நிறைவேற்றும் போது வருகின்ற பாடுகள், துன்பங்கள் சந்தோஷமாய் மாறும். தேவ சித்தம் செய்ய தனிமையின் வழியில் ஆபிரகாமை தேவன் அழைத்தார்.
> "

பவுல் எத்தனை தடவைகள் தனிமையாக செல்ல வேண்டி இருந்தது. தனிமையாக கட்டப்பட வேண்டியிருந்தது, தனிமையில் தேவனுக்காய் சாட்சியாக நிற்க வேண்டியதாக இருந்தது. தனிமையில்தேவனுடைய நாமத்தை சென்ற இடமெல்லாம் மகிமைப் படுத்தக் கூடியதாய் இருந்தது. தேவ சித்தம் என்ன என்பதனை அறிந்து நிறைவேற்றும் போது வருகின்ற பாடுகள், துன்பங்கள் சந்தோஷமாய் மாறும். தேவ சித்தம் செய்ய தனிமையின் வழியில் ஆபிரகாமை தேவன் அழைத்தார்.

## 02. தேவ சித்தம் செய்ய ஆபத்தின் வழியாய் தேவன் நடத்தினார்

தேவன் தன்னுடைய சித்தம் செய்வதற்காக ஆபத்தின் வழிக்கூடாக நடத்திக் கொண்டும் சென்றார். தேவ சித்தம் என்றாலே ஆபத்தான வழிகளா? என்று சிந்திக்கலாம். எல்லாம் ஆயத்தமாக்கப்பட்டிருந்தால் அது தேவ சித்தம் என்று சிந்திக்கின்றோம். எல்லாம் ஆயத்தமாய் இருக்கின்றது என்று தொடங்கினால் சில வேளை தேவ சித்தத்தை விட்டு போகவேண்டி வரும். தேவ சித்தம் நிறைவேற்ற ஆபத்தான வழிக்கூடாக தேவன் நடத்திச் சென்றமைக்கு உதாரணமாக: தேவனிமனிதாகிய யோசேப்பை பார்க்கலாம்.

**ஆதியாகமம் 37:23 யோசேப்பு தன் சகோதரரிடத்தில் சேர்ந்தபோது, யோசேப்பு உடுத்திக்கொண்டிருந்த பலவருண அங்கியை அவர்கள் கழற்றி, ஆதியாகமம் 37:24 அவனை எடுத்து, அந்தக் குழியிலே போட்டார்கள்: அது தண்ணீரில்லாத வெறுங்குழியாயிருந்தது. ஆதியாகமம் 37:28 அந்த வர்த்தகரான மீதியானியர் கடந்துபோகிற போது, அவர்கள் யோசேப்பை அந்தக்**

**குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக் காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு போனார்கள். ஆதியாகமம் 37:36 அந்த மீதியானியர் யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள்.** எகிப்திற்கு யோசேப்பு செல்ல வேண்டும் அது தான் தேவனுடைய சித்தம். அங்கு செல்வதற்காக தேவன் பாவித்த வழியை எங்களில் அனேகர் ஏற்றுக் கொள்ளமாட்டோம். இப்படி ஒரு வழி வேண்டாம் என்று சொல்வோம். சொந்த சகோதரர்கள் பகைத்து, அவனைத் தூக்கி குழியில் போட்டார்கள். இது அவனது சொந்த சகோதரர்களால் அவனுக்கு நேர்ந்த கதி. யோசேப்புக்கு அது தான் தேவனுடைய சித்தம்.

தேவனுடைய சித்தம் ஏன் இப்படியாய் இருக்கின்றது? தேவ சித்தத்தை விட நாம் விரும்புகின்றபடி வாழ்ந்தால் நன்றாய் இருப்போம் என்று சிந்திக்கின்றீர்களா? யோசேப்பு அப்படி நினைத்திருந்தால் வர வேண்டிய ஆசீர்வாதங்கள் வராமல் போயிருக்கும். யோசேப்பை குழியில் போட்டார்கள், பின்பு எடுத்தார்கள். வியாபாரிகள் வந்தமையால் அவர்களுக்கு அவனை விற்றுப் போட்டார்கள். யோசேப்பு எகிப்திற்கு செல்வதற்கு ஒரு வேதனையான வழி, துன்பம் நிறைந்த வழி, சொல்ல முடியாத மனபாரம் மூடுகின்ற வழி. ஆனால் அந்த ஆபத்து நிறைந்த வழிதான் யோசேப்பினுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தமாய் இருந்தது. ஆபத்து நிறைந்த, கைவிடப்பட்ட ஒரு வழி. தேவனுடைய பிள்ளைகளாகிய நாங்கள் எல்லாம் ரோஜாப் பூக்களாய் இருக்க வேண்டும் என்று சிந்திக்க முடியாது. ரோஜாப் பூவை எதிர்பார்க்க வாழைப்பூ கிடைத்தால் அது தான் தேவனுடைய சித்தம். தேவன் எங்களை நடத்திச் செல்லும் வழிகள், ஆபத்துக்கள், பயங்கள் சூழ்ந்தது போன்று இருக்கும். அடுத்து என்ன செய்வது என்று தெரியாத இருள் சூழ்ந்த நிலை போன்று இருக்கும். யோசேப்பு இந்த சந்தர்ப்பத்தில் முறுமுறுத்தான் என்று வேதத்தில் எங்கும் காணப்படவில்லை. அவனுக்கு தீமை செய்ய, குழியில் போட ஆயத்தமாய் இருந்தார்கள். இது தான் அவனுடைய வாழ்க்கையில் தேவ சித்தம். நாம் ஏன் தேவனை, சபையை, ஊழியர்களை, அம்மாவை, அப்பாவை நொந்து கொள்ள வேண்டும். ஏன் இந்த குடும்பத்தில் வந்து பிறந்தேன்? என்று சொல்கின்றீர்களா? இது தான் தேவன் உங்களுக்காக வைத்த வழி என்று புரிந்து கொண்டு அந்த வழியில் சென்று அடைந்தால் தான் தேவ சந்தோஷத்தைக் காணமுடியும், அது தான் தேவ சித்தம். அது தான் தேவன் உங்களுக்காய் வைத்த வழி.

தேவனுக்கு பிரியமாய், உண்மையுள்ளவர்களாய், பரிசுத்த

வான்களாய் இருந்தால் அது தான் உங்கள் வாழ்க்கையில் தேவ சித்தம். அந்த வழியை விட வேறு வழி இல்லை. யோசேப்பு வேறு வழியாய் செல்லவில்லை, தேவன் காண்பித்த அந்த வழியிலேயே சென்றான். பிற்பாடு இந்த யோசேப்பு அந்த தேசத்திலே வந்த பெரிய பஞ்சத்தில் ஜீவரட்சனை உண்டுபண்ணும் படியாய் தேவன் அவனை தெரிந்து கொண்டார். வருகின்ற வேதனையைக் குறித்து இங்கேயே வேதனைப்பட்டு, கர்த்தருடைய சித்தத்தை தள்ளினால் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டு காரியங்களைச் செய்ய முடியாமல் தடைபடும். தேவனுடைய நாமத்திற்கு சாட்சியாய் நீங்கள் இருக்க முடியாமல் போய் விடும். அப்படிப் போய்விடாமல் இருக்க வேண்டுமென்றால் தேவன் உங்களை நடத்தும் வழியில் பொறுமையோடு, முறுமுறுக்காமல் நடந்தால் உங்கள் வாழ்க்கை மூலம் தேவநாமம் மகிமைப்படும். இங்கே இருந்து எகிப்திற்கு செல்ல ஒரு வழி, பின்பு போர்த்திப்பார் வீட்டில் இருந்து சிறைக்குச் செல்ல இன்னொரு வழி, எத்தனை விதமான வழிகளின்மூலம்யோசேப்பு சென்றான். தேவ சித்தம் செய்வதற்காய் அவன் அப்படிச் செய்தான். நாங்கள் புரியாத, அறியாத வழிகளில் தேவன் எங்களை நடத்துவார். எங்களுக்கு ஆச்சரியம் தரக்கூடிய விதத்தில் அல்லது வேதனை தரக்கூடிய விதத்தில் தேவன் எங்களை வழிநடத்தலாம்.

சிலவேளை பெரிய ஆபத்தின் வழியில் தான் தேவனுடைய வழிகள் காணப்படும். இவைகள் எல்லாவற்றிலும் யோசேப்பு நீதிமானாய் காணப்பட்டான். இறுதியாக அவன் தேவனுக்கு பயன்தரக் கூடிய நல்ல ஞானத்தை கர்த்தர் அவனுக்கு கொடுத்தார். பஞ்சம் வந்தபோது அவனே அவைகளை நிவிர்த்தி செய்யும் படி அந்த தேசத்திலே அவனை தலைவனாக கர்த்தர் மாற்றி னார். தேவ சித்தத்திற்காய் உங்களை நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும்.

## 03. தேவ சித்தம் நிறைவேற தேவன் நெருக்கத்தின் வழியில் நடத்தினார்

யோனா ஒரு தீர்க்கதரிசி, தேவன் நினிவேக்கு போகும்படி கூறினார். தேவன் செய்ய சொல்லிய காரியம் மிகவும் சிறியது. ஆனால் இந்த யோனா தீர்க்கதரிசனப் புத்தகத்தில் பெரும்பாலான பகுதியில் அவனை திருத்த வேண்டியதாய் இருந்தது. யோனா அதைச் செய்யவில்லை. அவன் ஏன் அதைச் செய்யவில்லையென்றால், அந்த அசீரியர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் செய்த கொடுமை களை அவன் நினைத்தான். மிகவும் கொடூரமான தண்டனைகளை அந்த அசீரியர் கொடுத்தார்கள். இப்படிச் செய்ததால் இந்த நினிவே மக்கள் மீது யோனாவுக்கு மிகுந்த வெறுப்பு காணப்பட்டது. நீ போய் சொல்லு என்று தேவன் யோனாவுக்கு சொன்ன போது அவனுடைய இருதயம் அதற்கு அனுமதிக்கவில்லை.

அதனால் எதிர்ப்பக்கம் செல்ல தமஸ்குவிற்கு கப்பல் ஏறினான். யோசேப்பு எகிப்திற்கு செல்வதற்கு ஆயத்தப்படுத்தப் பட்ட சிறந்த வழிகள் ஒன்றுமில்லை. ஆனால் யோனா தர்சீசிற்கு செல்வ தற்கு ஆயத்தம் படுத்தப்பட்ட சிறந்த வழி இருந்தது. ஆயத் தப்படுத்தப்படாத யோசேப்பு சென்ற வழி தான் தேவ சித்தம்: ஆயத்தப்படுத்தப்பட்ட யோனா சென்ற வழி தேவ சித்தம் அல்ல. ஆகவே தேவ சித்தத்தை அறிந்து கொள்வதில் விசுவாசிகள் ஒவ் வொருவரும் கண்ணும் கருத்து மாய் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். உங்களுடைய வாழ்க் கையில் ஏதாவது ஒரு காரியம் செய்யப்பட வேண்டும் என்றால் இரண்டும் ஒன்று போன்றே இருக்கும். யோசேப்புடைய வழி தேவ சித்தமே இல்லை என்ப தனைப் போன்று இருக்கும். தேவ சித்தத்தைக் கண்டு பிடிப்பது எவ்வளவு கடினமானது. யோனா சென்றவுடன் கப்பல் ஏறினான், தேவ சத்தம் கேட்பதற்காக நேரம் செலவிடுங்கள், இல்லையென் றால் எங்களுடைய அருமையான கிறிஸ்தவ வாழ்க்கை வேதனையில் போய் முடிந்து விடும். தேவ சித்தத்தை அறிய கற்றுக் கொள்ள வேண்டும்.

யோனா தேவனுக்குப் பிரிய மில்லாமல் கப்பல் ஏறிவிட்டான். தேவன் ஒருவரை தெரிந்து கொண் டால் சில வேளை தேவனுக்கு பிரியமில்லாத வாழ்க்கை என்றால் தேவன் அவரைத் தள்ளி இன் னொருவரை ஏற்படுத்த தேவனால் முடியும். அதற்கு சவுலும் தாவீதும் உதாரணமாக இருக்கின் றார்கள். இன்னொரு காரியம்:

> **தேவன் ஒருவரை தெரிந்து கொண்டால் அவர் எங்கே ஓடினாலும் அவரை விடமாட்டார். அதற்கு யோனா நல்ல உதாரணம்.**

தேவன் ஒருவரை தெரிந்து கொண்டால் அவர் எங்கே ஓடி னாலும் அவரை விடமாட்டார். அதற்கு யோனா நல்ல உதாரணம். சில பிள்ளைகள் உணவு உட் கொள்வதற்கு விருப்பம் இல்லா மல் வேண்டாம் என்று சொல் வது போன்று யோனாவும் தேவனுக்கு வேண்டாம் என்று சொல்லி செல்கின்றான். ஆனால் தேவன் அவன் மீது இரக்கமுள்ள வராய் இருந்தார். நீ தான் இதைச் செய்ய வேண்டும் என்று யோனா மீது தேவனுக்கு ஒரு அக்கறை. பிற்பாடு அவன் ஏறிய கப்பலில் அவனால் செல்ல முடியவில்லை. சீட்டு போட்டார்கள், சீட்டு அவன் பெயரில் விழுந்தது, என்னைத் தூக்கி சமுத்திரத்தில் போட்டு விடுங்கள் என்று வறட்டுத்தன மான துணிவுடன் இருந்தான். சிலர் இவனைப் போல கர்த்தர் சொல்ல சொல்ல அதைக் கேட்கா மல் தட்டிக் கழித்து கொண்டிருக் கலாம். நீங்கள் தான் தேவன் தெரிந்து கொண்ட நபராக இருந் தால் கர்த்தர் உங்களை பிடிப்பார். அந்த பிடியில் அகப்படும் முன்பு

கர்த்தருக்கு உங்களை விட்டுக் கொடுங்கள். யோனாவைத் தூக்கி சமுத்திரத்தில் போட்டுவிட்ட பிற்பாடு அங்கே தேவன் ஒரு மீனை ஆயத்தம் பண்ணி வைத்திருந்தார். சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்ததைப் போன்று யோனாவுடைய நிலமை இருந்தது. தேவன் தன்னுடைய சித்தத்தை நிறைவேற்ற சில ஆபத்தின் வழிகளை கையாளுகின்றார்.

மீன் ஏதாவது ஒன்றைச் சாப்பிட்டால் அது சமிபாடு அடைய வேண்டும். ஆனால் இயற்கை மீது அதிகாரம் கொண்ட சர்வ வல்லமையுள்ள தேவன், அவருக்கு சமுத்திரத்தின் மீது, கப்பலின் மீது, கப்பலில் இருக்கின்றவர்கள் மீது, யோனாவின் மீது, மீனின் மீதும் அதிகாரம் இருக்கின்றது. அவருக்கு எல்லாவற்றின் மீதும் அதிகாரம் இருக்கின்றது. அவர் படைத்த எல்லா சிருஷ்டிகளில் ஒன்றும் அவருடைய கண்ணிற்கு மறைவாக இருக்க முடியாது. இயேசு பேதுருவுக்கு கூறினார்: கடலில் வலையைப் போடு, பிடிபடுகின்ற முதலாவது மீனின் வாயைத் திறந்து பார், அதிலே பணம் இருக்கும், என்றார். அந்த கடலில் எத்தனை கோடி மீன்கள் இருந்திருக்குமோ தெரியாது, நாங்கள் அற்பமாய் எண்ணுகின்ற எல்லா உயிரினங்களையும் அவர் நன்றாக அறிந்திருக்கின்றார். அவைகளை அறிந்த ஆண்டவர் விசேஷித்த சிருஷ்டிப் பாகிய என்னையும், உங்களையும் அறிந்து கொள்ளமாட்டாரா?

மீன் யோனாவை விழுங்கிக் கொண்டது. தேவனுடைய சித்தத்தை விட்டு விலகி ஓடினவர்களை மீண்டும் தேவ சித்தத்திற்குள் கொண்டு வருவதற்காய் ஆபத்தான வழியை யோனாவுக்கு தேவன் கட்டளையிட்டார். குற்றம் செய்யாத யோசேப்புக்கும் ஆபத்தான வழி தான் தேவ சித்தத்தைக் கண்டு கொள்வதற்கு: அதே போன்று குற்றம் செய்த யோனாவுக்கும் ஒரு ஆபத்தான வழியைக் கொண்டு தான் தேவன் தன்னுடைய சித்தத்தை நிறைவேற்றினார். தேவ சித்தத்தைத் தெரிந்தும் தேவ சித்தத்தைவிட்டு ஓடிக் கொண்டிருந்தால் கிருபையின் நிமித்தமாய் அது ஆபத்தான வழியாக இருந்தாலும் தன்னுடைய அன்புக்குள் சேர்த்துக் கொள்ளும்படி அந்த ஆபத்தான வழியை அனுமதிப்பார். நேற்று நேசித்தவர்கள் இன்றைக்கு வெறுக்கின்றார்கள். ஆகவே அவர்கள் பக்கம் தான் பிழை என்று சிந்திக்கின்றோமா? இல்லை நான் தேவ சித்தத்தை உடைத்ததினால் என்னை ஒரு ஆபத்தான வழியில் நடத்தும்படி மனந்திரும்பும்படியாகவே அப்படி நடத்துகின்றார். **யோனா 2:1-2 (1.) அந்த மீனின் வயிற்றிலிருந்து, யோனா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி: 2. என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்: அவர் எனக்கு உத்தரவு அருளினார்: நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர்.** நினிவேக்குப் போ என்று சொல்லும் போது ஜெபிக்கவில்லை, ஆனால் ஜெபிக்கும்சூழலையைத் தேவன் உருவாக்கி

இருக்கின்றார். யுத்த காலங்களில் கர்த்தாவே என்று சொல்லிக் கொண்டிருந்தோம், ஒரு நெருக்கத்தில் இருக்கும் போது தேவனை நோக்கி பார்ப்போம். செழிப்பாய் இருக்கின்ற போது கர்த்தரை மறக்கின்றோம்: ஆபத்துக்கள் வருகின்ற போது தான் கர்த்தரை நினைக்கின்றோம்.

தேவ சித்தத்தை நிறைவேற்றி இருந்தால் மீனின் வயிற்றுக்குள் வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆபத்துக்குள் நாம் போவதற்கு தேவனும் காரணமில்லை, மீனின் வயிற்றுக்குள் போக யோனா தான் காரணமாக இருந்தான். பெரிய ஆபத்துக்கள், துன்பங்கள், ஜீவனுக்காக போராடிக்கொண்டிருந்தால் தேவ சித்தத்தை எந்த இடத்தில் உடைத்தீர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். மீனின் வயிற்றில் இருந்து தேவனை நோக்கிப் பார்க்க யோனாவுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. மீனின் வயிறு மிகவும் இருளாக, நாற்றமாக இருந்திருக்கும். யோனா அந்த நிலமையில் மீனின் வயிற்றில் இருந்து சிந்திக் கத்தக்க நிலைமையை ஆண்டவர் உருவாக்கினார். இதுவரைக்கும் யாரும் மீனின் வயிற்றுக்குள் போய் திரும்பி வந்தது என்று கேள்விப்படவில்லை: அமெரிக்காவில் 40பேருடன் ஒரு சிறிய படகை ஒரு மீன் விழுங்கி விட்டது. அவர்கள் திரும்பி வந்ததாக சொல்லப்படவில்லை. ஆனால் யோனா மீது தேவன் வைத்த இரக்கத்தினால் அவன் தப்பினான். அதே போன்று நினிவே பட்டணத்தின் மீது தேவன் வைத்த இரக்கம். நீங்களும் ஏதாவது ஒரு வேதனையான நிலைமையில் இருந்தால் யோனாவைப் போல மனந்திரும்புதலுக்குள்ளாய் கடந்து வாருங்கள். யோனாவை போல ஒரு மெய்யான இருதயத்தை ஆண்டவரிடம் கேளுங்கள். பிற்பாடு யோனாவை மீன் கரையில் கொண்டு வந்து கக்கிவிட்டது. தேவனுடைய சித்தங்கள் பெரும்பாலும் நெருக்கத்தின் வழிகள் மூலமாய் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. வாழ்க்கையில் வரும் துன்பங்கள் ஆண்டவருடைய சித்தம் என்று அறிந்து கொண்டால் முடிவில் வெற்றி. யோனா சென்றான், தேவன் சொன்னதை சொன்னான். ஆபத்தைக் கண்டு ஓடவேண்டாம். தேவ சித்தம் என்று கண்டு கொண்டால் அந்த வழியி லேயே செல்லுங்கள்.

## 04. தேவ சித்தம் நிறைவேற தேவன் மரணத்தின் வழியில் நடத்தினார்

இயேசு பிதாவின் சித்தம் நிறைவேற சிலுவையில் மரித்தார். அப். பவுல் ரோமாபுரியில் நீரோ மன்னனால் சிரச்சேதம் செய்யப்பட்டார். அப். பேதுரு சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டுக் கொல்லப்பட்டார். இன்னும் அநேக அப்போஸ்தலர்கள் இரத்த சாட்சிகளாய் மரித்தார்கள். உயிரோடு தோல் உரிக்கப்பட்டார்கள், கொதித்துக்கொண்டிருக்கும் எண்ணெய்க்குள் போடப்பட்டார்கள், கற்களால் எறியப்பட்டுக்

கொல்லப்பட்டார்கள், பட்டயத்தால் வெட்டப்பட்டார்கள், ஈட்டியாலே குத்தப்பட்டார்கள், ஏன் தன் சித்தத்தை செய்வதற்காக மரணத்தின் பாதைக்கூடாக தேவன் நடத்தினார். **ஏசாயா 53:12 அவர் தம்முடைய ஆத்து மாவை மரணத்திலூற்றி, அக்கிரமக் காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்: பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார்**. தேவன் சர்வ வல்லமையுள்ளவர், அவர் வேறு ஏதாவது வழியை தெரிந்திரிருக்க முடியும். ஆனால் தேவனுடைய நீதி பாவத்துக்கு தண்டனை வேண்டும், அதை எந்த மனிதனும் செய்ய முடியாது, அல்லது எந்த மனிதனும் தேவன் பார்க்கின்ற சுத்தம் கொண்டவனாக இல்லை. அதனால் தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனை இந்த பூமிக்கு அனுப்பினார். அவர் தேவனுடைய ரூபமாய் இருந்தும் அதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். இயேசுவின் பிறப்பில் இருந்து அவர் தன்னை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கும் நாள் வரைக்கும் நிந்தனைகளும், அவமானங்களும், குற்றச்சாட்டுக்களும், பிசாசினால் பிடிக்கப்பட்டவர் என்ற வார்த்தைகளும் வந்து கொண்டே இருந்தது.

இறுதியாக பொய் குற்றம் சுமத்தி அவரை சிலுவையில் அறைந்தார்கள். இவைகள் எல்லாம், என்னை அனுப்பிய பிதா அனுமதித்த காரியம் என்று இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். அவர் மரித்து எங்களை விடுதலையாக்கினார். அவர் மரித்து மூன்றாம் நாள் எழுந்து மக்களுக்கு பாவ மன்னிப்பை தரவேண்டும் என்று பிதாவின் விசேஷித்த திட்டமாக, சித்தமாய் இருந்தது. இந்த சித்தத்தை நிறைவேற்ற இயேசு கிறிஸ்து மரிக்க வேண்டும் என்ற வழி பிதாவினால் கொடுக்கப்பட்டது. எங்களுக்கு வருகின்ற எந்த தாக்கமாய், பாதிப்பாய் இருந்தாலும், கடுமையான இழப்புக்கள், அவமானங்கள், மிகப்பெரிய நிந்தனைகள் இருந்தாலும் எல்லாவற்றின் மத்தியிலும் அது தேவ சித்தம் என்று தெரிந்தால் ஆண்டவர் விட்டுக் கொடுத்தது போன்று எங்களை நாங்கள் விட்டுக் கொடுப்போம். அவரைத் துப்பினார்கள், குட்டினார்கள், பரியாசம் பண்ணினார்கள், கசப்புக் கலந்த காடியைக் கொடுத்தார்கள். தேவன் தன்னுடைய சித்தம் நிறை வேற்ற இந்த வழியை தெரிந்து கொண்டார் என்பது இயேசுவுக்குத் தெரியும்.

தேவ சித்தம் நிறைவேற்ற ஆபிரகாமை தனிமையின் வழியில் கொண்டு சென்றார், தன்னுடைய சித்தம் நிறைவேற யோசேப்பை ஆபத்தின் வழியாக நடத்திச் சென்றார், யோனாவை நெருக்கத்தின் வழியாக நடத்திச் சென்றார், இயேசு கிறிஸ்துவை மரணத்தின் வழியாக நடத்திச் சென்று தேவ சித்தத்தை நிறைவேற்றினார். எனவே எம்முடைய வாழ்க்கையிலும் தேவனுடைய சித்தத்திற்கு இடம் கொடுத்து அவர் வழியில் நடப்போம்.

"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"

**போதகர் வே.மகாராஜா**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற
விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும்
விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| **இலங்கை** | S.L Rs 220.00 Per Year |
| **இந்தியா** | S.L Rs 390.00 Per Year |
| **கனடா, அமெரிக்கா** | S.L Rs 840.00 Per Year |
| **சிங்கப்பூர், மலேசியா** | S.L Rs 420.00 Per Year |
| **மத்திய கிழக்கு நாடுகள்** | S.L Rs 510.00 Per Year |
| **ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா** | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர்:-.............................................................

விலாசம்:-..........................................................

.......................................................................

.......................................................................

.......................................................................

**தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.**

To: ..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**